<u>சுருக்கம்</u>

சுற்றுலா–பண்பாட்டுத் துறை– தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டம்.– தமிழ்நாடு 2007 ஆம் ஆண்டு நாட்டுப்புறக் கலைஞர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம்.

---

<u>சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்(பண்2)துறை</u>

அரசாணை(நிலை) எண்.03

திருவள்ளுவர் ஆண்டு 2038
மார்கழி 22
நாள் 07.01.2008.

படிக்கவும்:

1. அரசாணை(நிலை) எண்.70, சுற்றுலா (ம) பண்பாட்டுத் துறை, நாள் 26.4.2007.
2. அரசாணை(நிலை) எண்.02, சுற்றுலா (ம) பண்பாட்டுத் துறை, நாள் 7.1.2008.

---

<u>ஆணை:–</u>

மேலே முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட அரசாணையில், நாட்டுப்புறக் கலைகளில் ஈடுபட்டுள்ள நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு சமூகப் பாதுகாப்பும் நலப் பணிகளும் அளிப்பதற்காக தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தை அமைத்ததை அறிவித்து அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

2. இதனுடன் இணைக்கப்பட்ட அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் ஆங்கிலத்தில் வெளியிடப்படும்.

3. தமிழ்நாடு அரசிதழில் இந்த அறிவிக்கையின் தமிழாக்கத்தை வெளியிடுவதற்காக சென்னை–79, அரசு மைய அச்சகம், பணி மேலாளருக்கு, இத்தமிழாக்கத்தை அனுப்புமாறு, சென்னை–600 009, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறையின் அரசுச் செயலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. தகவலுக்காகவும், பதிவேட்டிற்காகவும் அறிவிக்கையின் 100 நகல்களை அரசுக்கு அனுப்புமாறு சென்னை அரசு மைய அச்சகம், பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அறிவிக்கையின் 25 நகல்களை சென்னை–28, கலை பண்பாட்டு ஆணையாளருக்கு, நேரடியாக அனுப்புமாறும் அவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

வி. இறையன்பு,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம்,
சென்னை–79(தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக).
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் (ம) செய்தி(மொழிபெயர்ப்பு)த்துறை,
சென்னை–600 009.
கலை–பண்பாட்டு ஆணையாளர்,சென்னை–600 028.
சட்டத் துறை, சென்னை–600 009.
உறுப்பினர்–செயலாளர்,
தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றம், சென்னை–28.

....2

<u>நகல் பெறுவோர்:</u>
அரசுச் செயலாளர்,
சுற்றுலா–பண்பாட்டுத் துறை, சென்னை–9.
தமிழ்நாடு சட்டப் பேரவைச் செயலகம், சென்னை–600 009.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
முதலமைச்சரின் செயலாளர்., சென்னை–600 009.
தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்